புதுக்கோட்டை கல்லூரில் - மஞ்சுவிரட்டில் மாடுமுட்டி

உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு ரூ. 3 லட்சம் நிதி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை,மே.4–

மஞ்சுவிரட்டில் மாடுமுட்டி உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு ரூ. 3 லட்சம் நிதியுதவி வழங்கி முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

அதன் விவரம் வருமாறு:

புதுக்கோட்டை மாவட்டம் கல்லூரில் நேற்று (3.5.2023) நடைபெற்ற மஞ்சுவிரட்டு போட்டியினை பார்த்துக்கொண்டிருந்த திருமயம் தாலுகா, கே.புதுப்பட்டியைச் சேர்ந்த சுப்ரமணியம், (வயது 30) என்பவரை எதிர்பாராத விதமாக மாடுமுட்டியதில் உயிரிழந்தார் என்ற செய்தியினை கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

கழக இளைஞர் அணி சார்பில் தமிழ்நாடெங்கும்

சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள் நடத்திடுக!

இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிக்கை!

சென்னை, மே.4-

கழக அரசின் இரண்டாண்டு சாதனைகளை விரிவாக விளக்கி தமிழ்நாடெங்கும் சாதனை விளக்கத் தெருமுனைக் கூட்டங்கள் நடத்திட வேண்டும் கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டிற்கான விடியலாக, நம்முடைய முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு, ஆட்சிப் பொறுப்பேற்று இரண்டாண்டுகளை நிறைவு செய்து, வருகிற மே 7 ஆம் தேதி மூன்றாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது.

'மகளிருக்கான கட்டணமில்லாப் பேருந்து', 'புதுமைப் பெண் திட்டம்', 'நான் முதல்வன்', 'மக்களைத்தேடி மருத்துவம்', 'நம்மைக் காக்கும் 48', 'அனைவருக்கும் ஐ.ஐ.டி. எம்', 'இல்லம் தேடி கல்வி' என முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சியின் நீட்சியாக, சமூகநீதித் திட்டங்களின் வழியே வளர்ச்சிப் பாதையில் நடைபோட்டு வருகிறது நம் கழக அரசு.

இந்த இரண்டு ஆண்டு கால திராவிட மாடல் அரசின் சாதனைகளை, மக்களிடம் கொண்டு சேர்த்திட, மே 7, 8 & 9 ஆகிய தேதிகளில் தமிழ்நாடு முழுவதுமுள்ள 72 கழக மாவட்டங்களின் ஒன்றியநகர பகுதிபேரூர் கழகங்களின் சார்பில், 1,222 இடங்களில் சாதனை விளக்கப் பொதுக் கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

இக்கூட்டங்களில் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள், அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள்... என பலர் கலந்துகொண்டு அரசின் சாதனைகளை விளக்கிக்கூறி உரையாற்ற உள்ளோம். இளைஞர் அணியைச் சேர்ந்த அனைவரும் இந்தக் கூட்டங்களில் தவறாமல் கலந்துகொள்ள வேண்டும்.

நம் கொள்கை எதிரிகளும், அடிமைகளும் தினம் ஒரு அவதூறாக சமூக வலைதளம் மூலம் பரப்பி வரும் இன்றையச் சூழலில், நம் சாதனைகளை இல்லந்தோறும் கொண்டு சேர்ப்பது அவசியமாகிறது.

எனவே, சாதனை விளக்கப் பொதுக்கூட்டங்கள் முடிந்தபிறகு, கழக அரசின் சாதனைகளை இல்லந்தோறும் கொண்டு சேர்த்திடும் வகையில், இளைஞர் அணி சார்பில் 'சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்களை' சிறப்புற நடத்திட வேண்டும் என்று நம் நிர்வாகிகளைக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்களை மாவட்டஒன்றியநகரபகுதிபேரூர் கழக நிர்வாகிகளுடன் ஒருங்கிணைந்து நம் அணிக்குப் பெருமை சேர்த்திடும் வகையில் நடத்திடுமாறும், ஒவ்வொரு மாவட்டத்திலும் எத்தனை கூட்டங்கள் நடைபெற உள்ளன என்ற தகவலையும் அன்பகத்துக்கு தெரியப்படுத்துமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் தெருமுனைக் கூட்டங்கள் வெறும் சாதனை விளக்கக் கூட்டங்கள் மட்டுமல்ல, எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரத்திற்கான தொடக்கமும்கூட. ஆகவே, இந்தப் பெரும்பணியின் பொறுப்புணர்ந்து செயலாற்றிடுவோம்.

கழகத் தலைவர் அவர்களின் வழியில், எனக்கு அன்பளிப்பாகப் பூங்கொத்துகளையும், பொன்னாடையையும் அளிக்காமல் புத்தகங்களையும், கல்வி மற்றும் மருத்துவ சேவைப் பணிகளுக்கு உதவிடும் வகையில் இளைஞர் அணி அறக்கட்டளைக்கு நிதியுதவியும் வழங்கிடுங்கள் எனக் கேட்டுக்கொண்டிருந்தேன்.

அதன்படி, இளைஞர் அணி நேர்காணல், அரசு நிகழ்ச்சிகள் என நான் செல்லும் இடங்களில் எல்லாம் கழகத்தினர் புத்தகங்களையும், இளைஞர் அணியின் அறக்கட்டளைக்கு நிதியுதவியையும் வழங்கி வருகின்றனர். இதுவரை நடந்து முடிந்துள்ள 6 மண்டலங்களுக்கான நேர்காணலில் மட்டும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட புத்தகங்களையும், 425 பேர்கள் 35 லட்சத்து 93 ஆயிரத்து 118 ரூபாயையும் இளைஞர் அணி அறக்கட்டளைக்காக வழங்கியுள்ளனர். அவர்கள் அனைவருக்கும் என் நன்றி.

இளைஞர் அணி நேர்காணல் பணிகளும் 6 மண்டலங்களில் நடந்து முடிந்துள்ளன. மீதமுள்ள 3 மண்டலங்களுக்கான நேர்காணலும் விரைவில் நடத்தி முடிக்கப்பட்டு, மாவட்டப் பொறுப்புகளுக்கான நிர்வாகிகளை அறிவிக்கவுள்ளோம்.

நாம் இருக்கும் காலத்தின் அவசியத்தை உணர்ந்து, சட்டமன்றத் தேர்தலில் அடிமைகளை விரட்டியதைப்போல், எதிர் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அவர்களை அடிமைப்படுத்திய பாசிச சக்திகளையும் விரட்டி அடிக்க, உறுதியேற்றிடுவோம்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம் - புதூர், விளாத்திகுளம் ஒன்றியங்களில் - 96 கிராம ஊராட்சிகளில்

'ஹெச்.சி.எல்.சமுதாய்' திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்!

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில் கையெழுத்தானது!

சென்னை, மே 4-

இந்தியாவில் செயல்படும் உலகளாவிய தொழில் நுட்ப நிறுவனமான HCLTechன் கார்ப்பரேட் சமூகப் பொறுப்பு அமைப்பான HCL அறக்கட்டளை, அதன் முதன்மைத் திட்டங்களில் ஒன்றான HCL Samudayஐ தமிழ்நாட்டின் 95 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்த இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், தமிழ்நாடு அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி. பெ.அமுதா மற்றும் HCL அறக்கட்டளையின் திட்ட இயக்குநர் அலோக் வர்மா ஆகியோர் நேற்று (03.05.2023) சென்னை, தலைமைச் செயலகத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இந்நிகழ்வில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் மரு. தாரேஸ் அகமது, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சிறப்புச் செயலாளர் முனைவர் மு.கருணாகரன், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச.திவ்யதர்சினி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி. பா.பிரியங்கா பங்கஜம், கூடுதல் இயக்குநர் திருமதி. க. முத்து மீனாள், HCL நிர்வாகக் குழு உறுப்பினர் ஷிகர் மல்ஹோத்ரா, HCL அறக்கட்டளையின் துணைத் தலைவர் டாக்டர். நிதி புந்திர், குழு மேலாளர் பிரிஜோ தாருக், எம்.விஸ்வலிங்கம், வைபவ் சவுகான் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

HCL Samuday தமிழ்நாட்டில் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள புதூர் மற்றும் விளாத்திக்குளம் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 95 கிராம ஊராட்சிகளில் 1,40,000 பயனாளிகளுக்கு பயனளிக்கும் வகையில் நீர் வள மேலாண்மை, விவசாயம், சுகாதாரம், கல்வி, ஊட்டச்சத்து மேலாண்மை போன்ற துறைகளில் கவனம் செலுத்தி, பின்தங்கிய குடும்பங்களுக்கு சிறந்த வருமானத்திற்கு வழிவகுக்கும். HCL Samuday திட்டத்தின் கீழ் தூத்துக்குடி மாவட்டத்தில் 42,000 வீடுகளில் அடிப்படைக் கணக்கெடுப்பு முடிக்கப்பட்டு, ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் தேவையான திட்டங்கள் அடையாளம் காணப்பட்டு, அவை கிராம வளர்ச்சித் திட்டங்களாகத் தொகுக்கப்பட்டதின் வாயிலாக, கிராம சமூகங்களின் பங்கேற்பை அதிகரிக்க, தொடக்கத் திட்டங்கள் கண்டறியப்பட்டன.

தூத்துக்குடி மாவட்டத்தில் HCL Samudayன் செயல்பாடுகளில் சில

முக்கிய வெற்றிகள்:

132 தொடக்கப் பள்ளிகளில் சிறந்த கற்றலுக்காக டிஜிட்டல் ஸ்மார்ட் போர்டுகள் பொருத்தப்பட்டுள்ளன.

டிஜிட்டல் கற்றலுக்காக 20 அங்கன்வாடி மையங்களின் செயல்பாடுகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

58 கிராம ஊராட்சிகளில் தொற்றாத நோய்களுக்கான மேம்பட்ட பரிசோதனை மற்றும் மேலாண்மை செய்யப்பட்டுள்ளன.

ஐந்து கிராம அளவிலான தையல் மையங்களில் தையல் இயந்திரங்கள் மூலம் சுயஉதவிக் குழுக்களில் உள்ள 100 பெண்களுக்குப் பயிற்சி வழங்கி, அவர்களுக்கு வாழ்வாதார வாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.

ஊட்டச்சத்துக் குறைபாடு மேலாண்மைக்கான சோதனை முகாமில் கண்டறியப்பட்ட ஊட்டச்சத்து குறைபாடுள்ள 41 குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து மருந்துகள் வழங்கப்பட்டன.

தற்போது, HCL Samuday உத்தரப்பிரதேசத்தில் உள்ள Hardoi மாவட்டத்தின் பதினொரு பகுதிகளில் செயல்பட்டு வருகிறது. மேலும் 524 கிராம ஊராட்சிகளில் 2,136 கிராமங்களில் வசிக்கும் 24 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் வாழ்வாதார ¬¬வாய்ப்புகளை மேம்படுத்துவதில் பெரும்பங்காற்றி வருகிறது. HCL Samuday மிகவும் அத்தியாவசியமான சொத்துக்கள் மற்றும் உள்கட்டமைப்புகளை உருவாக்கிட அரசுடன் இணைந்து, உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் உள்ளூர் சமுதாய அமைப்புகளுடன் ஆழ்ந்து ஈடுபடுவதன் மூலம் சிறப்பான அணுகுமுறையைப் பின்பற்றுகிறது. மேலும், வளர்ச்சித் திட்டங்களில் உள்ளூர் சமூகங்களை பொறுப்பேற்கத் தூண்டு கோலாகவும் அமைந்து வருகிறது.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

வ.எண்.	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்	ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண்.	மொத்தம்
1	மே.பொ/கொ&நி/வ.செ.அ.மி.நி	CE-17, CE-18	2
2	மே.பொ/கொ&நி/வ.செ.அ.மி.நி-2	CE 28, CE 29, CE 30	3
3	த.பொ./ப/செ/வடக்கு	T.S.153	1

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும், திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களைக் காணவும். www.tangedco.gov.in, www.tntenders.gov.in/nicgep/app, www.tenders.tn.gov.in

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்". செ.ம.தொ.இ/2395/ஒப்பந்தப்புள்ளி/2023

தேனி – அல்லிநகரம் நகராட்சி

குறகிய கால மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ந.க.எண். 1806 / 2022 / இ1, நாள் : 02.05.2023.

15வது நிதிக்குழுத் திட்டம் (Tied Grant) 2022 - 2023 ம் ஆண்டின் கீழ் இந்நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை பயன்பாட்டிற்காக 11 எண்ணம் (LCV) இலகு ரக வாகனங்கள் மற்றும் 18 எண்ணம் (BOV) பேட்டரியால் இயங்கக்கூடிய வாகனங்கள் வாங்குவதற்கு தேனி - அல்லிநகரம் நகராட்சி ஆணையாளர் அவர்களால் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து மின்னணு ஒப்பந்தப்புள்ளி வாயிலாக இரண்டு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது.

வ. எண்.	மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்)	ஒப்பந்தப்புள்ளி படிவம் கிடைக்கும் விபரம்	ஒப்பந்தப்புள்ளி திறப்பு விபரம்
1.	ரூ. 80.30	03.05.2023 (முற்பகல் 10.00 மணி முதல்)	10.05.2023 (பிற்பகல் 03.30 மணிக்கு)
2.	ரூ. 36.00		

குறிப்பு:– 1. ஒப்பந்தப்புள்ளிக்கான முன்வைப்புத் தொகை பணி மதிப்பீட்டில் 1 (ஒரு) சதவிகிதம் மின்னணு ஒப்பந்தப்புள்ளி இணையத்தின் மூலம் ஆன்லைனில் செலுத்தலாம். இணையதள வாயிலாக முன் வைப்புத் தொகை செலுத்துவதற்கு தடை எதும் இருப்பின் முன்வைப்பு தொகையினை ஆணையாளர் தேனி - அல்லிநகரம் நகராட்சி என்ற பெயரில் வங்கி வரைவோலையாக எடுத்து அதனை ஸ்கேன் செய்து தொழில்நுட்ப ஆவணங்களுடன் இணைத்து கணினியில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். முன் வைப்புத் தொகைக்கான அசல் வங்கி வரைவோலையை தனி உறையில் வைத்து தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி திறப்பதற்கு முன்பு கிடைக்கும் வகையில் ஆணையாளர் தேனி - அல்லிநகரம் நகராட்சி என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். 2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை http://tntenders.gov.in என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். 3. ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் செய்து சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் 10.05.2023, நேரம் பிற்பகல் 3.00 மணி வரை. 4. இதர விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய மின்னஞ்சல் முகவரி commr.theni@tn.gov.in, தொலைபேசி எண். 04546 – 252470. 5. ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் விடுமுறையாக அறிவிக்கும் பட்சத்தில் மறு வேலை நாளில் அதே நேரம் ஒப்பந்தபுள்ளி திறக்கப்படும்.

செ.ம.தொ.இ/ 2409 /ஒப்பந்தப்புள்ளி/2023

ஆணையாளர் (பி), தேனி –அல்லிநகரம் நகராட்சி.

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம்

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

வ.எண்.	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்	ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண்.	மொத்தம்
1	த.பொ / மி.தொ.தி/திருச்சி	E-01/23-24	1
2	த.பொ / மி.தொ.தி/சென்னை	TP1-05/2023-24	1

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும், திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களைக் காணவும். www.tantransco.gov.in , www.tenders.tn.gov.in , www.tntenders.gov.in/nicgep/app.

செ.ம.தொ.இ/2397/ஒப்பந்தப்புள்ளி/2023

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்".

தி.மு.க. இளைஞர் அணி

கழகத்தில் உள்ள முன்னோடிகள், மாற்றுத் திறனாளிகள், மருத்துவம் – கல்வி உதவி தேவைப்படுவோருக்கு உதவித்தொகை வழங்கிடும் வகையில், கழக இளைஞர் அணி அறக்கட்டளைக்குப் பலரும் நிதி அளித்து வருகின்றனர். அந்த வகையில், கடந்த 01–05–2023 அன்று, சேலத்தில் நடைபெற்ற இளைஞர் அணி நேர்காணலின் போது என்னிடம் நிதி உதவி வழங்கியவர்களின் விவரம் வருமாறு :–

வ. எண்	பெயர், பொறுப்பு, கழக மாவட்டம்	தொகை (ரூ)
1	எம்.ஜி.எஸ்.வெங்கடேஷ்வரன், தருமபுரி.	1,00,000
2	பி.என்.சி.மகேஷ்குமார், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர், தருமபுரி மேற்கு மாவட்டம்.	25,000
3	பி.மகேந்திரன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர், சேலம் மேற்கு மாவட்டம்.	25,000
4	க.உமாசங்கர், ஒன்றியக் கழகச் செயலாளர், பனமரத்துப்பட்டி ஒன்றியம், சேலம் கிழக்கு மாவட்டம்.	25,000
5	சி.செல்வராஜ், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர், பாலக்கோடு தெற்கு, தருமபுரி.	10,100
6	பி.டி.ஹரிபிரசாத், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் காரிமங்கலம் மேற்கு.	10,000
7	டி.சீனிவாசன், நகர மன்ற உறுப்பினர், நகர இளைஞர் அணி அமைப்பாளர், கிருஷ்ணகிரி.	10,000
8	கா.முகேஷ்குமார், 380, ராஜீவ் காந்தி தெரு, கனரம்பட்டி, சேலம்.	10,000
9	எஸ்.ஹரீஷ்குமார், சூளகிரி தெற்கு ஒன்றியம், கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம்.	10,000
10	பி.எஸ்.கார்த்திகேயன், மாவட்ட மாணவர் அணி முன்னாள் துணை அமைப்பாளர், சேலம்.	5,005
11	Dr.பிரபு ராஜசேகர், ஒன்றிய முன்னாள் செயலாளர், தருமபுரி மேற்கு மாவட்டம்.	5,000
12	செல்வகுமார், 3–வது குறுக்குத் தெரு, சாந்தி நகர், ஓசூர், கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம்.	5,000
13	எஸ்.எம்.ஜோதிவேல், உதயநிதி ஸ்டாலின் ரசிகர் மன்ற மாவட்டத் துணைச்செயலாளர், சேலம்.	5,000
14	பட்டறை மணி, அருள்நிதி நற்பணி மன்ற மாவட்டத் தலைவர், கன்னங்குறிச்சி, சேலம்.	5,000
15	ஆர்.நடராஜன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர், சேலம் கிழக்கு மாவட்டம்.	5,000
16	அ.நிசார் அகமத், குந்தாரப்பள்ளி, கிருஷ்ணகிரி மேற்கு.	5,000
17	ஜி.எம்.சரவண்குமார், ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர், கிருஷ்ணகிரி மேற்கு, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்.	5,000
18	பூ.முத்தமிழ்செல்வன், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர், எடப்பாடி ஒன்றியம், சேலம் மேற்கு மாவட்டம்.	5,000
19	எம்.ரவிராஜ், பண்டசீமனூர் (அ), பர்கூர் (தா), கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்	5,000
20	கடலரசு சேரன், நகர தலைவர், கிருஷ்ணகிரி.	5,000
21	நா.ஜெகன்நாதன், சேலம் மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர், சேலம் மத்திய மாவட்டம்.	3,000
22	என்.எஸ்.தினேஷ் செல்வன், சேலம் மத்திய மாவட்டம்.	3,000
23	டி.செல்வராஜ், ஒன்றிய கவுன்சிலர், தாரமங்கலம் மேற்கு ஒன்றியம், சேலம் மேற்கு மாவட்டம்.	3,000
24	பி.சரவணன், பழனி.	2,000
25	த.கார்த்திக், ஒன்றியக் குழு உறுப்பினர், சின்னம்பள்ளி, தருமபுரி கிழக்கு மாவட்டம்.	2,000
26	எஸ்.நல்லபிரபு, நங்கவல்லி ஒன்றியம், சேலம் மேற்கு மாவட்டம்.	2,000
27	ஏ,சீத்தாராமையா, ஓசூர், கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம்.	2,000
28	ஏ.கண்ணன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர், சேலம் மேற்கு மாவட்டம்.	2,000
29	மு.தினேஷ், எடப்பாடி, சேலம் மேற்கு மாவட்டம்.	2,000
30	ஆர்.விக்னேஷ்குமார், சூலூர், கோவை.	2,000
31	எஸ்.வடிவேல், ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர், ஊத்தங்கரை தெற்கு ஒன்றியம், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்.	1,500
32	கே.ஆர்.மோகன், ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர், காவேரிப்பட்டினம் மேற்கு, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்.	1,100
33	Dr.மு.பிரசன்னா ரமணன், தகவல் தொழில்நுட்ப அணி தொகுதி ஒருங்கிணைப்பாளர், சேலம் மத்திய மாவட்டம்.	1,000
34	அஸ்லாம் ஷெரீப், பாலக்கோடு, தருமபுரி மேற்கு மாவட்டம்.	1,000
35	செ.செந்தில்குமார், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர், வாழப்பாடி ஒன்றியம், சேலம் கிழக்கு மாவட்டம்.	1,000
36	பி.டி.விமல், அ.புதுப்பட்டி (அ), பாப்பிரெட்டிப்பட்டி (தா), தருமபுரி.	1,000
37	பி.எம்.எஸ்.ஆனந்த், மாவட்டத் துணை ஒருங்கிணைப்பாளர், தகவல் தொழில்நுட்ப அணி, தருமபுரி மேற்கு.	1,000
38	எஸ்.உதயகுமார், ஒன்றிய துணைச் செயலாளர், தருமபுரி மேற்கு மாவட்டம்.	1,000
39	எம்.மகாலிங்கம், அரூர் ஒன்றியம், தருமபுரி மேற்கு மாவட்டம்.	1,000
40	எஸ்.தீனதயாளன், உதயநிதி ஸ்டாலின் ரசிகர் மன்ற மாவட்டத் துணை தலைவர், கிருஷ்ணகிரி.	1,000
41	பி.மாதையன், இளைஞர் அணி அமைப்பாளர், வேலனூர் (அ), அரூர் (தா), தருமபுரி மேற்கு,	1,000
42	மு.பிரகாஷ், சீதாராம் நகர், ஓசூர் (தா), கிருஷ்ணகிரி மேற்கு.	1,000
43	ஆர்.வேணுகோபால், சரண்டப்பள்ளி, தேன்கனிக்கோட்டை, கிருஷ்ணகிரி.	1,000
44	ஜி.கார்த்திக், கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம்.	1,000
45	கே.எம்.வெங்கடாஜலபதி, ஒன்றிய விவசாய அணி அமைப்பாளர், காரிமங்கலம் கிழக்கு, தருமபுரி மேற்கு மாவட்டம்.	1,000
46	எம்.சிவகுமார் (எ) சிவா, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்	1,000
47	கே.எஸ்.சக்திவேல், பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர், கம்பைநல்லூர், காரிமங்கலம், தருமபுரி மேற்கு மாவட்டம்.	1,000
48	JCB க.மோகன், அரூர் மேற்கு ஒன்றியம், தருமபுரி மேற்கு மாவட்டம்.	1,000
49	பெ.இராஜகோபால், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர், நல்லம்பள்ளி மேற்கு, தருமபுரி கிழக்கு மாவட்டம்.	1,000
50	கே.எம்.பழனி, உதயநிதி ஸ்டாலின் ரசிகர் மன்ற ஒன்றியத் தலைவர், கெலமங்கலம் ஒன்றியம், கிருஷ்ணகிரி மாவட்டம்.	1,000
51	செ.தினேஷ் பாபு, அப்பா செட்டி தெரு, காவேரிப்பட்டினம், கிருஷ்ணகிரி.	1,000
52	ஆர்.எஸ்.கிரி, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்.	1,000
53	பி.லோகேஷ், மொரப்பூர்.	500
54	மலை அன்பு, அரூர் கிழக்கு ஒன்றியம், தருமபுரி மேற்கு மாவட்டம்	500
55	சி.முருகன், தேன்கனிக்கோட்டை, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்	500
56	கே.அருண்பிரசாத், காரிமங்கலம், தருமபுரி மேற்கு மாவட்டம்.	500
57	கே.சி.ஆர்.தங்கராஜ், கடத்தூர் பேரூர், தருமபுரி மேற்கு மாவட்டம்.	500
58	சே.க.பிரபு, பகுதிப் பிரதிநிதி, அரசிப்பாளையம்.	500
59	ஜி.கே.சிவானந்தம், செட்டிமார்பட்டி, மலையாண்டஅள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம்.	500
60	ஜெ.அனன்யா, த/பெ / மு.ஜெயக்குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், திருப்பூர் தெற்கு மாவட்டம்.	500
	மொத்தம்	3,29,705

"அன்பகம்"
சென்னை – 18.
நாள் : 03–05–2023.

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி